**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : – **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10– ஆம் நாள் திங்கட்கிழமை

**CNR.No.TNTV06 - 000055-2026**

**அசல் வழக்கு எண்.32/2026**

பாரத ஸ்டேட் வங்கி, (09472)
**ஆதிச்சபுரம் கிளை,**
**அதன் உதவி மேலாளர்.** .... வாதி

**// எதிர்//**

P. சந்திரா .... பிரதிவாதி

இவ்வழக்கானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.தினகரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பி பிரதிவாதி கடந்த 20.04.2026ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு வருகை இல்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை :–**

வாதி வங்கிக்கு பிரதிவாதி செலுத்தவேண்டிய தொகை ரூ.79,350/– கிடைக்கும்படியும், மேற்படி தொகைக்கு வழக்கு தேதி முதல் தொகை கொடுத்து தீரும் வரை 8.1% பின்வட்டியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை கேட்டும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :–** வாதி வங்கியில் விவசாய பயிர்க்கடன் வேண்டி (KISSAN CREDIT SCHEME) என்ற முறையில் பிரதிவாதி கடந்த 27.01.2017ம் தேதியில் விண்ணப்பித்துள்ளார். அதற்கான பிரதிவாதி வாதி வங்கியில் பயிர்கடன்

கணக்கு எண்.36492561661 தொடங்கியுள்ளார். பிரதிவாதி தாக்கல் செய்த பயிர்கடன் விண்ணப்பத்தின் அடிப்படையில் 8.1% மாறுபடும் வட்டி விகிதத்தோடு, பிரதிவாதி தொடங்கிய விவசாய பயிர்க்கடன் கணக்கிற்கு நிதிபெறும் வரம்பாக ரூ.37,000/– அனுமதியளிக்கப்பட்டது.

மேற்படி விவசாய பயிர்க்கடன் வரம்புபடி பிரதிவாதி முழுமையாக விவசாயத்திற்கு தேவையாக பொருட்களை வாங்கி விவசாயம் செய்துள்ளார். மேற்படி பயிர்கடனுக்கு உறுதுணையாக பிரதிவாதி கொடுவை ஒப்பந்தம் மற்றும் ஏற்பாட்டு கடிதம் ஆகியவை வாதி வங்கிக்கு ஏற்படுத்திகொடுத்துள்ளார். இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்படி கடன் தொகையை 8.1% மாறுபடும் வட்டி விகிதத்தில் திரும்ப செலுத்துவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார்.

வாதி வங்கி சார்பில் பலமுறை பிரதிவாதியிடத்தில் கடன் தவணை தொகையை செலுத்த கேட்டுக்கொண்டபோதும், பிரதிவாதி வேண்டுமென்றே ஒப்புக்கொண்டு உறுதியளித்தபடி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றாமல் கடன் தவணை தொகையை திரும்ப செலுத்தாமல் இருந்து வருகிறார்.

பிரதிவாதி பெயரில் பராமரிக்கப்பட்டு வருகின்ற கணக்கு பட்டியலின்படி 01.01.2012 முதல் 19.06.2025 வரை ரூ.79,350/– பின் வட்டி 8.1% வீதம் வாதி வங்கிக்கு பிரதிவாதியிடமிருந்து வரவேண்டியுள்ளது. ஆகையால் மேற்படி கடன் தொகை மற்றும் வழக்கு செலவுத்தொகையினை பிரதிவாதி செலுத்தி வைக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பி பிரதிவாதி கடந்த 20.04.2026ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு வருகை இல்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

**4)** வாதி தரப்பில் வாதி வங்கியின் கிளை மேலாளர் விஜயகுமார் என்பவரை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5) இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**6) <u>தீர்வு</u> ;–**

**1.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, நிரூபண அபிடவிட் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது

2. வாதி வங்கியில் பிரதிவாதி பெற்ற கடன் தொகையை செலுத்தாத காரணத்தால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தொகை ரூ.79,350/– வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியது அவசியமாகும்.

**3.** வாதி தரப்பு வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கத்திகளை நிரூபணம் செய்யும் விதமாக வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் கடந்த 27.01.2017ம் தேதிய பயிர் கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 27.01.2017ம் தேதிய கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், ஏற்பாட்டு கடிதம் அசலம் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 27.01.2017 – 02.08.2025 வரையிலான பயிர்கடன் கணக்கு பேரோட்டு அறிக்கை உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆகவும், பயிர்கடன் கணக்கு முடிவு அறிக்கை உண்மை நகல் வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 04.12.2015ம் தேதிய சிட்டா மற்றும் அடங்கல் உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆகவும், கடந்த 30.05.2025ம் தேதிய வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 03.06.2025ம் தேதிய

அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.8 ஆகவும், கடந்த 21.01.2020, 12.01.2023க்கான உயிர்புக்கடிதம் (எண்ணிக்கை –2) அசல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.** வாதி வங்கியில் பயிர் கடன் தொகை ரூ.37,000/– கேட்டு பிரதிவாதிகள் விண்ணப்பம் கொடுத்ததன் அடிப்படையில் கடன் தொகையினை பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த 01.01.2012 முதல் 19.06.2025 வரை தொகை எதுவும் செலுத்தவில்லை என்பது புலனாகிறது. வாதி வங்கிக்கு பிரதிவாதி ஒப்புக்கொண்ட விகிதத்தில் கடனாகப் பெற்ற தொகையினை வட்டியுடன் சேர்த்து செலுத்த கடமைப்பட்டவர் என்பது வாதி தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமான பத்திரத்திலிருந்து தெரிய வருகிறது.

**5.** மேலும், வழக்கு காலவரையறைக்குள் பாதிப்படையவில்லை. பிரதிவாதி கடந்த 21.01.2020 மற்றும் 12.01.2023 ஆகிய தேதிகளில் உயிர்ப்பு கடிதங்கள் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது வா.சா.ஆ.9 ஆவணத்தின் வாயிலாக தெரிய வருகிறது. வாதி வங்கி கணக்கிட்டு கேட்டிருக்கும் வட்டி சட்ட முறையானதாக இருக்கிறது. வாதி தரப்பு சான்றாவணங்கள் அனைத்தும் வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளது.

**6.** மேலும், பிரதிவாதி இவ்வழக்கில் முன்னிலையாகி எதிர்வாதம் செய்து சான்றுகளை முன்னிட்டு வாதியின் வழக்கை பொய்ப்பிக்கவில்லை. வாதி வங்கி பிரதிவாதிக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை அனுப்பியும் பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வருகையில்லாததால் தோன்றாத் தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், வாதியின் வங்கி வழக்கினை நிராகரிப்பதற்கு காரணம் ஏதுமில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**7.** எனவே, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் வழக்குரையில் கண்டுள்ள தொகையினையும், வழக்குரை தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை நாள் வரையுள்ள வட்டியும், பின்

வட்டியும் செலுத்த இந்த பிரதிவாதி கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7) முடிவில்,

1. இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. தாவா தொகையான ரூ.79,350/– யும் அதில் அசல் தொகை ரூ.37,000/–க்கு தாவா தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் வரை ஆண்டு 1க்கு 9% வட்டியும், தீர்ப்பு நாள் முதல் தொகை வசூலாகும் நாள் வரை ஆண்டு ஒன்றுக்கு 6% வட்டியும் வாதி வங்கிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10–ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–(என். அழகேசன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

<u>வாதி தரப்பு சாட்சி</u> :–

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.விஜயகுமார் (SBI கிளை மேலாளர்) (வாதி), த/பெ.ராம்குமார். |

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.01.2017 | பயிர் கடன் விண்ணப்பம் அசல். |
| வா.சா.ஆ.2 | 27.01.2017 | கொதுவை ஒப்பந்தம் அசல். |
| வா.சா.ஆ.3 | – | ஏற்பாட்டு கடிதம் அசல். |
| வா.சா.ஆ.4 | 27.01.2017 – 02.08.2025 | பயிர்கடன் கணக்கு பேரோட்டு அறிக்கை உண்மை நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | – | பயிர்கடன் கணக்கு முடிவு அறிக்கை உண்மை நகல். |
| வா.சா.ஆ.6 | 04.12.2015 | சிட்டா மற்றும் அடங்கல் உண்மை நகல். |
| வா.சா.ஆ.7 | 30.05.2025 | வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.8 | 03.06.2025 | அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல். |
| வா.சா.ஆ.9 | 21.01.2020, 12.01.2023 | உயிர்புக்கடிதம் (எண்ணிக்கை – 2) அசல். |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் </u>:– இல்லை.

ஒம்/–(என். அழகேசன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.